# அனுசக்தி அதிகாரசபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அணுசக்தி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்ஏஎஸ்)

சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்காக பிரயோகிக்கப்பட்ட அளவுகோள் அடிப்படை சீராக்கப்பட்ட வரலாற்றுக் கிரயம் என அதிகாரசபை நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்பில் குறிப்பிட்டிருந்த போதிலும், நிதி நிலமைக் கூற்றின் திகதியிலுள்ளவாறு நிர்ணயிக்கப்பட வேண்டிய நியாயமான பெறுமதியிலிருந்து முன்கொண்டு செல்லப்பட்ட தொகைகள் பொருண்மையாக வேறுபட்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரசபை அதன் பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்களை எஸ்எல்ஏஎஸ் 7 - பொறி, ஆதனம் மற்றும் உபகரணங்கள் என்பதில் குறிப்பிட்டவாறு மீள் மதிப்பிட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 103.44 மில்லியன் வரலாற்றுக் கிரயம் கொண்ட முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களை மீள் மதிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அதிகாரசபையால் தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்பட்டிருந்தது.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அதிகாரசபையின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் படி நிலையான சொத்தின் மீதிகள் பேரேட்டுக் கணக்குகளின் இறுதி மீதிகளிலிருந்து வித்தியாசப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நிதி நிலமைக் கூற்றின் திகதியில் உள்ளவாறு மொத்த வித்தியாசம் ரூபா 1,113,835 ஆன தொகையாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சொத்தின் வகை | பேரேட்டுக் கணக்குகளின் படி மீதி | நிலையான சொத்துப் பதிவேட்டின் படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| விஞ்ஞான உபகரணங்கள் | 89,372,171 | 90,203,890 | 831,719 |
| ஏனைய உபகரணங்கள் | 449,717 | 446,780 | 2,937 |
| அலுவலக உபகரணங்கள்/ தளபாடங்கள் | 9,673,112 | 9,393,933 | 279,179 |
| மொத்தம் | | | 1,113,835 |

## 1.2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அறவிடப்படாதுள்ள ரூபா 4,604,649 நிலுவை மீதி தொடர்பில் (ஐயக்கடன் ஏற்பாட்டுக்கு முன்னருள்ள) சகல கடன்பட்டோர்களிடமிருந்தும் உறுதிப்படுத்தல்களை அதிகாரசபை கோரியிருந்த போதிலும், கணக்காய்விற்கு உறுதிப்படுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| வகை | மொத்தம் | ஓராண்டிற்குக் குறைந்த | 01 – 03 ஆண்டுகள் | 03 – 05 ஆண்டுகள் | 05 ஆண்டுக ளிற்கு மேல் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| பொதுவான விஞ்ஞான உபகரணங்கள் | 1,309,939 | 486,696 | 155,966 | 65,595 | 601,682 |
| கதிர்வீச்சுப் பாதுகாப்பு | 2,188,968 | 1,299,345 | 446,934 | 90,922 | 351,767 |
| கட்டமைக்கப்படாத பரீட்சித்தல் (என்டீரீ) வெளிக்களப்பரிசோதனை | 257,093 | 203,718 | 36,075 | - | 17,300 |
| கட்டமைக்கப்படாத பரீட்சித்தல் (என்டீரீ) பயிற்சிப் பாடநெறிகள் | 586,699 | 553,430 | - | 27,400 | 5,869 |
| உணவுப் பரிசோதனை | 261,950 | 184,140 | 75,310 | - | 2,500 |
| மொத்தம் | 4,604,649 | 2,727,329 | 714,285 | 183,917 | 979,118 |

மேற்குறிப்பிட்ட காலப்பகுப்பாய்வின் படி ரூபா 1,877,320 தொகை ஒரு ஆண்டிற்கும் மேலாக தீர்க்கப்படாதிருந்ததுடன், ரூபா 979,118 தொகையான மீதிகள் 05 ஆண்டுகளிற்கு மேல் தீர்க்கப்படாதவையாக இருந்தன. இதில் ரூபா 715,966 தொகை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியவையாகும்.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மாணங்களுடன் இணங்காமை.

1969 இன் 19 ஆம் இலக்க அனுசக்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 31 ஆம் பிரிவிற்கமைய மின்வலு மற்றும் சக்திவள அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஆலோசனைச் சபை 1999 முதல் கூடியிருக்கவில்லை. சபையால் 2006 இல் புதிய சபையொன்று பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 867,552 தொகையான கதிர்வீச்சு வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை போதிய மற்றும் பொருத்தமான சான்றுகள் கிடைக்கப்பெறாமையால் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டின் ரூபா 3,297,783 ஆன தேறிய பற்றாக்குறைக்கு எதிராக ரூபா 10,150,353 ஆன தேறிய பற்றாக்குறையினை விளைவித்திருந்தமையால், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 13,448,136 ஆன பின்னடைவைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்கான வருமான அதிகரிப்பைக் காட்டிலும் செலவினம் அதிகரித்திருந்தமை இந்த பின்னடைவிற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

கூட்டிணைந்த திட்டத்தின் படி, நாட்டில் அனுத் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி ெய்யும் நோக்குடன் சர்வதேச அனுசக்தி முகவர் நிலையத்தின் (ஐஏஈஏ) தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்து அமுல்படுத்துவதற்காக

இலங்கையின் மத்திய நிலையமாக அணுசக்தி அதிகாரசபை (ஏஈஏ) தொழிற்படுகிறது. அதற்கமைய, அங்கத்துவ நாடுகளிற்கு நாட்டின் நிகழ்ச்சித்திட்ட சட்டகத்துடன் அல்லது அவர்களது தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நாட்டிற்கான நிகழ்ச்சித்திட்ட சட்டகம் இல்லாத தேசிய அபிவிருத்தித் திட்டங்களுடன் தொடர்புபட்டுள்ள பல்வேறு வகைப்பட்ட செயற்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக ஐஏஈஏ நிதிகளை வழங்குகிறது. இருப்பினும், தொடர்புடைய நிதிபெறும் நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதியில் அமுலாக்கப்பட்ட செயற்திட்டங்களை ஏஈஏ பூரணப்படுத்த வேண்டுமென ஐஏஈஏ எதிர்பார்க்கின்றது.

செயற்திட்டங்களை அமுல்படுத்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 – 2013 இற்கான அவர்களது தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மேற்குறிப்பிட்ட காலத்தில் 08 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 58,579,470 இற்குச் சமனான யூரோ 741,724 தொகையினை கூட்டு நிதியிடலாகவும் ரூபா 80,129,257 இற்குச் சமனான யூரோ 1,014,584 தொகையினை அடிக்குறிப்பு நிதியிடலாகவும் ஐஏஈஏ அங்கீகரித்திருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, கீழே காட்டப்பட்டவாறு மேற்படி அங்கீகரிக்கப்பட்ட 8 செயற்திட்டங்களில் ஏஈஏ 4 செயற்திட்டங்களை அமுல்படுத்தியிருந்ததுடன் ஏனைய 4 செயற்திட்டங்களையும் ஏனைய அரசாங்க நிறுவனங்களைக் கொண்டு அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

| செயற்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட கூட்டு நிதியிடல் | | | அடிக்குறிப்பு நிதியிடல் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மைய நிதியிடல்களின் பயன்படுத்தல் (2012 இற்கு அங்கீகரிக்கப்பட்டவை) | | பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | மொத்தம் (2012/ 2013) | 2012/ 2013 | தொகை | சதவீதம் | |
| | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | % | |
| எஸ்ஆர்எல்/0/010 | 61,035 | 42,000 | 103,035 | 50,000 | 39,061 | 64 | ஏஈஏ |
| எஸ்ஆர்எல்/1/007 | 67,866 | 18,000 | 85,866 | 150,000 | 46,770 | 69 | ஏஈஏ |
| எஸ்ஆர்எல்/2/008 | 62,000 | 47,000 | 109,000 | 80,875 | 43,262 | 70 | மின்வலு மற்றும் சக்தி அமைச்சு, |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | மொரட்டுவ பல்கலைக்கழகம், இலங்கை மின்சார சபை |
| எஸ்ஆர்எல்/2/009 | 70,775 | 89,621 | 160,396 | - | 50,000 | 71 | ஏஈஏ, சுற்றாடல் அமைச்சு |
| எஸ்ஆர்எல்/5/043 | 48,097 | - | 48,097 | - | 21,196 | 44 | ஏஈஏ, பேராதனை பல்கலைக்கழகம் |
| எஸ்ஆர்எல்/5/044 | 35,460 | 38,150 | 73,610 | 133,709 | 24,212 | 68 | பேராதனை பல்கலைக்கழகம், மலேரியா ஒழிப்பு இயக்கம் |
| எஸ்ஆர்எல்/6/032 | 63,000 | 27,000 | 90,000 | 350,000 | 68,885 | 109 | பேராதனை பல்கலைக்கழகம், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் |
| எஸ்ஆர்எல்/6/033 | 26,810 | 44,910 | 71,720 | 250,000 | 14,493 | 54 | போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் |
| **மொத்தம்** | **435,043** | **306,681** | **741,724** | **1,014,584** | **307,879** | **71** | |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 இற்காக அங்கீகரிக்கப்பட்ட யூரோ 435,043 மொத்தக் கூட்டு நிதியிடலில் மீளாய்வாண்டின் முடிவிலுள்ளவாறு ஏஈஏ யூரோ 307,879 அல்லது 71 சதவீதத்தினை மாத்திரம் பயன்படுத்தியிருந்தது.

(ii) 2012 – 2013 வரை அடிக்குறிப்பு நிதியிடலாக ரூபா 1,014,584 தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், கூட்டு நிதியிடலை அமுல்படுத்தலில் தாமதம் காரணமாக ஏஈஏ, ஏனைய நிதி பெறுகின்ற நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் அடிக்குறிப்பு நிதியிடல் தொகையினை பயன்படுத்த முடியாத நிலையிலிருந்தன.

*(iii)* 2012 – 2013 ஆம் காலப்பகுதிக்குரிய ஐஏஈஏ இன் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நிதிபெறுகின்ற மற்றும் இணைநிறுவனங்களை ஒருங்கிணைந்து செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் ஏஈஏ எடுத்திருந்தமைக்கான போதிய மற்றும் பொருத்தமான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. *''அதிகாரசபையின் தலைவரின் கருத்தின் படி, சர்வதேசப் பிரிவு வரையறுக்கப்பட்ட பதவியணியினருடன்*

*செயலாற்றி வருவதுடன் அண்மித்த காலம் வரை இப்பிரிவு சகல மனிதவள விடயங்களையும் கையாண்டு வந்திருந்தது. இப்பிரிவு வரையறுக்கப்பட்ட பதவியிணரைப் பயன்படுத்தி அதனால் செய்ய முடியுமானவற்றைக் காட்டிலும் அதிகாமானதை செய்துள்ளது. இருப்பினும், ஏஈஏ செயற்திட்டங்கள் அமுல்படுப்படுவதனை மதிப்பீடு செய்து மீளாய்வு செய்வதற்காக ஏஈஏ மிகச் சிரேஸ்ட எட்டு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய செயற்திட்ட மதிப்பீட்டுச் சபையொன்றை நியமித்துள்ளது. என்பதாகும்.''*

(iv) தற்போதுள்ள செயற்திட்டங்களை அமுல்படுத்தலில் தாமதம் காரணமாக புதிய செயற்திட்டங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் அரிதாகியுள்ளன.

(ஆ) ஐஏஈஏ இனால் 2009 – 2011 வரையான காலத்திற்குத் தயாரிக்கப்பட்ட நிலைமை அறிக்கையின் படி, பின்வரும் செயற்திட்டங்கள் 2011 ஆம் ஆண்டின் முடிவில் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்தன. செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் தாமதம் காரணமாக அவ்வாறு எதிர்பார்க்கப்பட்ட நிதிகளை ஏஈஏ இற்கு பயன்படுத்த முடியாது போயிருந்தது. 2013 யூன் 30 இல் உள்ளவாறு மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட நிதியிலிருந்து பயன்படுத்தியிருந்த நிதியின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செயற்திட்ட இல. | அங்கீகரிக்கப்பட்ட கூட்டு நிதியிடல் அடிக்குறிப்பு நிதியிடல் | | | | 2013 யூன் 30 இல் உள்ளவாறு கூட்டு நிதியிடல்களின் பயன்படுத்தல் | | பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | மொத்தம் | தொகை | சதவீதம் | |
| | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | % | |
| எஸ்ஆர்எல்/9/009 | 92,600 | 173,275 | 45,000 | 310,875 | 370,708 | 119 | ஏஈஏ, அனர்த்த முகாமைத்துவ நிலையம் |
| எஸ்ஆர்எல்/8/020 | 82,900 | 87,155 | 66,300 | 236,355 | 7,770 | 3 | ஏஈஏ, மத்திய சுற்றாடல் அதிகாரசபை |
| எஸ்ஆர்எல்/6/031 | 145,400 | 103,500 | 35,975 | 284,875 | 213,720 | 75 | களனிப் பல்கலைக்கழகம் |
| எஸ்ஆர்எல்/5/042 | 129,576 | 85,116 | 94,675 | 309.367 | 239,192 | 77 | களனிப் பல்கலைக்கழகம், மிருக ஆராய்ச்சி நிறுவனம் கண்டி, பேராதனை பல்கலைக்கழகம் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எஸ்ஆர்எல்/8/019 | 207,715 | 245,115 | 120,000 | 572,830 | 240,930 | 42 | ஏஈஏ |
| **மொத்தம்** | **658,191** | **694,161** | **361,950** | **1,714,302** | **1,072,320** | **63** | |

*''அதிகாரசபையின் தலைவரின் கருத்தின் படி, எஸ்ஆர்எல்/8/020 செயற்திட்டம் அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் தோல்வியடைந்திருந்தது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியுடன் கேஓஐசீஏ இன் ஆதரவு கிடைக்குமென்ற எதிர்பார்ப்பில் ஐஏஈஏ இனால் செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தேசிய திட்டமிடல் திணைக்களம் செயற்திட்டத்திற்கும் அதிகாரசபைக்கும் குறைவான முன்னுரிமையினை வழங்கியிருந்ததுடன் மத்திய சுற்றாடல் அதிகாரபைக்கும் கேஓஐசீஏ இடமிருந்து தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாது போயிருந்தது. இக் காரணங்களினால் செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தது. ஆனாலும் ஒருபகுதிக் கிரயத்தைப் அரசாங்கத்துடன் பகிர்ந்துகொண்டு எஸ்ஆர்எல்/6/032 செயற்திட்ட உதவி ஏற்பாட்டிற்காக இலங்கைக்கு அங்கீகரிக்கப்பட்ட நிதிகளை ''கெம்மா கெமரா'' இனைக் கொள்வனவு செய்வதற்காக ஐஏஈஏ ஏற்கனவே பயன்படுத்தியிருந்தது.*

(இ) பின்வரும் செயற்திட்டங்கள் 2008 ஆம் ஆண்டின் முடிவில் பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், நீண்ட தாதமத்தின் பின்னர் அச்செயற்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டிலேயே பூரணப்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்ட இல. | காலப்பகுதி | அங்கீகரிக் கப்பட்ட நிதி | உள்ளபடியான செலவினம் | 2013 யூன் 30 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகளின் சதவீதம் | பூரணப்படுத்திய திகதி |
|---|---|---|---|---|---|
| | | யூரோ | யூரோ | | |
| எஸ்ஆர்எல்/6/030 | 2007-2008 | 190,680 | 160,994 | 84 | 2012 மே 22 |
| எஸ்ஆர்எல்/2/2007 | 2007-2008 | 187,040 | 170,622 | 91 | 2012 திசெம்பர் 04 |

*''அதிகாரசபையின் தலைவரின் கருத்தின் படி, ஆயுட்கால மற்றும் நிபுனத்துவமிக்க பொருத்தமான ஆயுட்கால நிறுவனங்களை கண்டுபிடிப்பதில்*

*சிரமம் காரணமாக இச்செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் தாதம் ஏற்பட்டிருந்தது.*

(ஈ) தேசிய அபிவிருத்தி விடயங்கள் மற்றும் சமூகப் பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பங்களிப்பதற்காக அனுத் தொழில்நுட்பங்ளைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான நிபுனத்துவங்கள் காணப்படாதுள்ள மற்றும் தேசிய மட்டத்தில் தெளிவற்ற வசதிகள் கொண்ட நிதிபெறும் அங்கத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு ஐஏஈஏ தனது தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தது. ஆகையால், நிபுனர்கள், இயலுமைகள் அல்லது உட்கட்டமைப்புகளில் சிறப்பாக இனங்காணப்பட்ட தேசிய இடைவெளியினை நிரப்புவதற்காக செயற்திட்டங்கள் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

முகவர் நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள நிதிகளை வினைத்திறனாகவும் பயனுறுதியாகவும் பயன்படுத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு (95 சதவீத அமுல்படுத்தல் சதவீதத்துடன்) ஏஈஏ எதிர்பார்த்திருந்த போதிலும், சில செயற்திட்டங்களின் அமுலாக்கல் சதவீதம் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அச்செயற்திட்டங்களிலிருந்தான வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வடிவமைப்புக்கள் நாட்டிற்கான தேவைகளை பொருத்தமான விதத்தில் கருத்திற்கொண்டு எதிர்வுகூறப்பட்டு டிருக்காமை இதற்கான சான்றாகும். இவ்வாறு தோல்விடைந்திருந்த சில செயற்திட்டங்ள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செயற்திட்ட இல. | அங்கீகரிக்கப்பட்ட நிதி | | | | | | 2013 யூன் 30 இல் உள்ளவாறு கூட்டு நிதியிடல்களின் பயன்படுத்தல் | | பெற்றுக்கொண்ட நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | மொத்தம் | தொகை | சதவீதம் | |
| | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | யூரோ | % | |
| எஸ்ஆர் எல்/5/040 | 74,100 | 143,495 | - | 69,395 | - | 286,990 | 57,450 | 20 | தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் |
| எஸ்ஆர் எல்/8/020 | - | - | 82,900 | 87,155 | 66,300 | 236,355 | 7,770 | 3 | ஏஈஏ, மத்திய சுற்றாடல் அதிகாரசபை |

**3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருத்தமான ஊக்குவிப்புத் திட்டமொன்றை தயாரிக்காதும் 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரியிடமிருந்து தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலும் மீளாய்வாண்டில் தனது ஊழியர்களிற்கு ஊக்குவிப்புப் படியாக அதிகாரசபையால் ரூபா 735,796 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 1,172,351 தொகையினை அதிகாரசபை மேலதிகநேரப் படியாக செலுத்தியிருந்ததுடன் அதே காலப்பகுதிக்காக அதிகாரசபையின் ஊழியர்களால் விடுமுறைக்குப் பதிலாக 266 ½ நாட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. 2013 மார்ச் 19 ஆந் திகதி இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் இந்நடைமுறையை நிறுத்துவதற்கும் அது தொடர்பில் ஒரு நலனை மாத்திரம் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் ஊடாக பல்நோக்கு மின்னியல் காந்தக் கதிர்வீச்சு வசதிக்காக (எம்ஜீஐஎப்) ரூபா 9,417,746 பெறுமதியான சொத்துக்கள் (உபகரணங்கள்) ஐஏஈஏ இனால் 2010 மே 31 ஆந் திகதி அன்பளிப்புச் செயய்ப்பட்டிருந்தன. இருப்பினும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை எம்ஜீஐஎப் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடங்காமையால் அச் சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன. அத்தொகை அதிகாரசபையின் நீண்டகாலச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2008 மே 26 ஆந் திகதி எடுக்கப்பட்ட சபைத் தீர்மானத்தின் படி, ரூபா 397,758 பெறுமதியான பழுதடைந்த அமோனியா சல்பேட் இருப்பை பாடசாலைகளிற்கு அல்லது ஐரீஐ நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வுத் திகதியான 2013 ஆகஸ்ட் 15 வரை அவ் இருப்பு விளைவற்றுக் காணப்பட்டது.

**3.4 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.**

மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் படி பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தாக்கமுடைய ஈகோ பரிசோதிப்பான் (Impact Echo Tester) ஒன்றைக் கொள்வனவு செய்தல்

(i) கூடியவிலைக் கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டு ரூபா 3,091,200 விலைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் எவ்வித நியாயமான காரணமுமின்றி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு குறைந்த விலையை நிராகரித்திருந்தது.

(ii) கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரருடன் ஒப்பிடுகையில் குறைந்த விலையை நிராகரிப்பதற்கான ஒரேயொறு விலகல் குறித்துரைத்த தேவைப்பாடொன்றாகக் குறிப்பிடப்பட்டிருந்த ‘‘நோட்புக் கணனி மற்றும் இரண்டு பீசீஎன் கேபில்ஸ்’’ என்பன உள்ளடக்கப்பட்டிருக்காமை மாத்திரமேயாகும். குறித்த கம்பனியால் வழங்கப்பட்டிருந்த ‘‘கடலொக்’’ இன் படி, :அறிக்கைகளை உள்ளீடு செய்வதற்காக தரவுகளை கணனிக்குள் மிகச் சுலபமாக உள்வாங்கி தரவுப் பகுப்பாய்வை மேற்கொள்ள முடியும்.’’ அத்துடன் தரவுத் தொடர்பாடல் ஆர்எஸ் - 232 மற்றும் வின்டோஸ் கொம்படிபெல் கணனி மென்பொருள் என்ற இடத்தில் இடம்பெறுகின்றது. அதன்படி, சொல்லப்பட்ட விடயங்கள் முறைமையின் தொழிற்பாட்டிற்கு அவ்வளவு முக்கயமானவையல்ல என்பது வெளிப்பட்டது.

கொள்வனவு வழிகாட்டல்கள் 7.8.3 இன் பிரகாரம், வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளிலுள்ள விலகல்கள் தொழிற்பாட்டை, தரத்தினை அல்லது விநியோகத்தினை பாதிக்காதிருப்பின் அதனைக் கணிப்பிடவும் பெறுமதியொன்றை வழங்கவும் முடியுமாவதுடன் அவை சிறிய விலகல்களாக இனங்காணப்பட்டு ஒப்பீட்டு நோக்கத்திற்காக விலையிருந்து கழிக்கப்படவோ அல்லது சேர்க்கப்படவோ முடியும்.

அதற்கமைய,

- ‘‘நோட்புக் கணனி மற்றும் இரண்டு பீசீஎன் கேபில்ஸ்’’ என்பன கேள்விப்பத்திர ஆவணங்களில் இன்றியமையாதவையாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அவை சிறிய விலகல்களாகவே இனங்காணப்பட்டிருத்தல் வேண்டும்.

- குறைவான விலைமனுவை நிராகரித்திருந்தமை காரணமாக அதிகாரபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 771,690 ஆகும்.
- அதிகாரசபையால் பொறுப்பேற்கப்பட்டிருந்த நட்டத்துடன் ஒப்பிடுகையில் அதிகூடிய இயலளவு கொண்ட ''நோட்புக் கணனி மற்றும் இரண்டு பீசீஎன் கேபில்ஸ்'' என்பவற்றை சந்தையில் மிகக் குறைந்து விலைக்கு பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும்.

என்பன அவதானிக்கப்பட்டன.

(iii) இந்த உபகரணத்தை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அது பரிசோதிக்கப்படாததுடன் பெறப்பட்டு 6 மாதங்கள் கடந்த பின்னரே தொழில்நுட்பச் சாத்தியம் மற்றும் செயற்பாட்டுத் திறன் என்பன பரிசோதிக்கப்பட்டன. இருப்பினும், பரிசோதிப்பதற்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் இல்லாதிருந்ததுடன் அதற்கமைய இந்தியாவிலிருந்து நிபுனர் ஒருவர் வரவழைக்கப்பட்டு சில பரிசோதனைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டன. ஆகையால், உபகரணங்களை செயற்படுத்துவதற்காக பயிற்சிக்கான தேவைப்பாடு கருத்திற் கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(iv) இவ் உபகரணங்கள் வர்த்தக நோக்கங்களிற்காக 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொங்ரீட் பரிசோதித்தல் ஈரலிப்பு மானி கொள்வனவு

---

(i) 2012 ஆம் ஆண்டில் ஈரலிப்பு மானி கொள்வனவு செய்வதற்கான கேள்விமனுக் கோரல்களிற்காக மூன்று வழங்குனர்கள் மாத்திரம் மனுக்களைச் சமர்ப்பித்திருந்தனர். கூடியவிலைக் கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டு ரூபா 355,000 விலைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்கள் வழங்கப்பட்டு குறைந்த விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது.

(ii) குறவைான விலைமனுவை நிராகரித்திருந்தமை காரணமாக அதிகாரபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 123,875 ஆகக் காணப்பட்டதுடன் குறைந்த விலையைக் காட்டிலும் அது 35 சதவீதம் அதிகமானதாகும்.

(iii) இவ் உபகரணங்கள் வர்த்தக நோக்கங்களிற்காக 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) தொணி உயர்நிலை பரிசோதித்தல் உபகரணம் மற்றும் தொணி ஈகோ பரிசோதிப்பான் கொள்வனவு

இரைச்சல் தொணி பரிசோதித்தல் முறையின் மீது தொணி பரிசோதித்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு மேற்குறித்த உபகரணங்களை அதிகாரசபை கொள்வனவு செய்திருந்தது. இரண்டு உபகரணத்தையும் ஒரே நோக்கத்திற்காக பயன்படுத்த முடிந்திருப்பினும் தொணி உயர்நிலை பரிசோதித்தல் உபகரணமானது தொணி ஈகோ பரிசோதிப்பானைக் காட்டிலும் தொழில்நுட்ப ரீதியின் முன்னேற்றகரமானதாகும். அதன்படி, தொணி உயர்நிலை பரிசோதித்தல் உபகரணத்தைக் கொள்வனவு செய்வதன் மூலம் மாத்திரம் அதிகாரசபை தனது குறிக்கோளை அடையக்கூடியதாக இருந்திருக்கும். ஆகையால், தொணி ஈகோ பரிசோதிப்பானைக் கொள்வனவு செய்வதற்காக அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,545,600 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ் உபகரணங்கள் வர்த்தக நோக்கங்களிற்காக 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்காமை மேலும் அவதானிக்கப்பட்டது.

### 3.5 மனித வள முகாமைத்துவம்

நெகிழ்வுத்தன்மை கொண்ட பதவியணி மட்டங்களை பேணிவரத் தவறியமை மற்றும் காலரீதியாக பதவியணியினை மீளாய்வு செய்திருக்காமை காணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 10 பதவிநிலைத் தரங்கள், 10 எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் மற்றும் 4 சிற்றூழியர் தரங்கள் அடங்கலாக வேறுபட்ட மட்டங்களில் 24 வெற்றிடங்கள் நிலவின. அதிகாரசபையின் பதவியணியினருடன் தொடர்புடைய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2012 | |
|---|---|---|---|
| | | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்கள் |
| பதவிலைத் தரங்கள் | 62 | 52 | 10 |
| எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள் | 50 | 40 | 10 |
| சிற்றூழியர் தரங்கள் | 25 | 21 | 04 |
| மொத்தம் | 137 | 113 | 24 |

**3.6 1969 இன் 19 ஆம் இலக்க அணுசக்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் திருத்தம்**

சர்வதேச அணுசக்தி முகவராண்மை 2006 சனவரி 01 ஆம் திகதிய ஏயூரீ/எம்யூஎல்ரீ/ஐஏஈஏ/ 22 ஆம் இலக்கமுடைய தனது கடிதத்தின் மூலம், தற்போதைய அதிகாரச் சட்டம் அது சட்டமாக்கப்பட்ட காலத்தில் போதியதாக இருந்ததுடன் நிகழ்கால சர்வதேச பாதுகாப்பு நியமங்களின் நோக்கில் சுகாதார/விவசாய மற்றும் ஏனைய துறைகளில் கதிர் வீச்சு தொழில்நுட்பங்களின் அதிகரித்த பிரயோகத்தினால் மேற்படி அதிகாரச்சட்டம் திருத்தப்பட வேண்டியதாக உள்ளதென அதிகார சபைக்கு அறிவித்திருந்தது. மேலும், அக்கறையிலுள்ள ஏதாவது முரண்பாட்டை தவிர்ப்பதற்கான நோக்கிலும் அதிகார சபையின் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் எல்லை வகுக்கப்பட்டிருக்காமையாலும் தற்போதைய அதிகாரச் சட்டத்திற்கான திருத்தம் தேவைப்படுகின்றது. தற்போதைய அதிகாரச் சட்டத்திலுள்ள நலிவுகளை மீளாய்வு செய்வதற்கும் புதிய ஒரு வரைபு அதிகாரச் சட்டத்தைத் தயாரிப்பதற்குமாக 2006 இல் ஒரு குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நோக்கம் இவ் அறிக்கைத் திகதி வரை வெற்றியளித்திருக்கவில்லை.

**3.7 அதிகாரசபைக் கட்டிடத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விடுதல்**

அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டிடத்தின் இரண்டாம் மாடியிலுள்ள 545 சதுர அடிகள் விஸ்தீரணம் கொண்ட மூன்று அறைகள் மாதமொன்றிற்கு ஒரு சதுர அடி ரூபா 100 வீதம் தனியார் கம்பனியொன்றிற்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதான விலை மதிப்பீட்டாளரின் சேவையைப் பெற்றுக் கொள்ளாது வாடகை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கேட்போர் கூடம், வாகன தரிப்பிடம் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பும் நல்லாட்சியும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்கான வருடாந்தக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள பல விடயங்கள் முழுமைப்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரை மட்டும் கொண்டிருந்ததுடன்

அந்த உத்தியோகத்தரிற்கும் மேலதிக வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

**4.2 கணக்காய்வுச் சபை**

கணக்காய்வுச் சபையால் எடுக்கப்பட்ட தீர்மானங்களிற்காக பணிப்பாளர் சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்த பல சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**4.3 கொள்வனவுத் திட்டம்**

அதிகாரசபையால் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கும் பாதீட்டுற்கும் அமைவானதாக காணப்படவில்லை.

**4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டிற்கும், உண்மையானவற்றிற்கு இடையில் குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை காட்டுகின்றது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்
(ஆ) கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்
(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்குதல்
(ஈ) கொள்வனவுகள்
(உ) வளங்களைப் பயன்படுத்துதல்
(ஊ) மனித வள முகாமைத்துவம்
(எ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஏ) பதவியினருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு
(ஐ) பாதீட்டுக் கட்டுப்பாடு